**கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்றிட்டம் - 2015**

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557 மற்றும் 2558 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5 ஆம் பட்டியலின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் படி, முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகரசபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகவுள்ளன. முன்னேற்றப்பட்ட கடல்சார் மற்றும் நாடளாவிய நீர் தரம் என்பவற்றின் ஊடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள நகர மற்றும் புறநகர் பகுதிகளில் 1.5 மில்லியன் வதிவிடத்தினருக்காக நகர சுற்றாடல் மற்றும் பொது சுகாதாரம் என்பவற்றினை முன்னேற்றி அதன் விளைவாக உடல்நல மற்றம் சுகாதார நிலைமையை முன்னேற்றுதல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,003.53 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 109.12 மில்லியனானதுடன் அதில் ரூபா 10,380.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.37 மில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2017 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. .

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றம் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதன் மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) பேணப்பட்ட கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளிற்கிணங்க இருந்தனவா என்றும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதுமாகும்

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இதுவரையிலான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதன் மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் போது பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1.23 மில்லியன் முற்பணமானது மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 வரையிலும் கூட ஆய்வுகூடத்திற்கான கட்டிடத்தின் நிர்மாண பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிராத போதிலும், சுற்றுச்சூழல் ஆய்வுகூட கட்டிட நிர்மாணத்தில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரருக்கு மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்ட ரூபா 5.23 மில்லியன் தொகையும் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 5.4.12 ஆம் இலக்க பந்தி மற்றும் 2002 இன் 14 இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம், 2014 யூன் மாதம் முதல் 2015 ஒக்டோபர் மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில் 04 ஒப்பந்தத்தார்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 40.24 மில்லியன் தொகையான பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 94.37 | 10,380.70 | 2,778.98 | 19.87 | 2,778.98 | 36.98 | 4,878.00 |
| இலங்கை அரசாங்கம் | 14.75 | 1,622.83 | 294.23 | 2.06 | 288.80 | 5.38 | 709.53 |
| **மொத்தம்** | **109.12** | **12,003.53** | **3,073.21** | **21.93** | **3,067.78** | **42.36** | **5,587.53** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 5 ½ ஆண்டுகள் கடந்த பின்னரும் ரூபா 12,003,53 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 109.12 மில்லியன் ஒதுக்கீட்டில் 39 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 5,587.53 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 42.36 மில்லியன் மாத்திரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து செயற்திட்டத்திற்கான விரிவான அமுலாக்கல் திட்டமொன்று இல்லாதிருந்தமையால் எஞ்சிய 1½ வருட காலப்பகுதியினுள் செயற்திட்ட நடவடிக்கைகளுக்கான மொத்த ஒதுக்கீட்டின் பயன்பாடானது அண்மிக்க முடியாததாக இருந்தது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

கொழும்பு பெரும்பாக எல்லைக்குட்பட்ட நாடளாவிய நீரின் சுகாதார நிலைமை மற்றும் உடல் நலம் என்பவற்றை முன்னேற்றும் நோக்கில், சாக்கடை குழாய்கள், மற்றும் கடல் நோக்கிய வடிகால்கள் மற்றும் நீரிறைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றை புனரமைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், செயற்திட்டமானது கொழும்பு மாநகரசபை எல்லையின் சுற்றாடல் மாசடைதல் கூறுகளை இனங்காணுவதற்கும் அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்காணுவதற்கும் உரிய கவனம் செலுத்தியிருக்கவில்லை. ஆகையால், பாடசாலை மாணவர்கள், குடிசைகளில் வாழும் மக்கள் போன்றோரை கருத்திற்கொள்ள வேண்டிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் புறநகரிலிருந்து கொழும்பு மாநகரசபை எல்லைக்கு தொழில் மற்றும் ஏனைய நோக்கங்களுக்கு அடிக்கடி வருகைதரும் நபர்கள் போன்றோர் கழிவு முகாமைத்துவம் மீதான கல்வியூட்ட வேண்டிய தரப்பினராக போதியளவில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தள விஜயங்களின் போது செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட புதைசாக்கடை நுழைவாயில்களில் குப்பைகளை இடும் சந்தர்ப்பங்களும் சாக்கடை இணைப்புக்களிலான அடைப்புக்களும் அவதானிக்கப்பட்டதுடன், புதைசாக்கடை நுழைவாயில்களில் இடப்பட்ட குப்பைகளை அகற்றுவதற்கு செயற்திறனான முறைமைகள் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு பெரும்பாக எல்லையின் 125 கிலோ மீற்றர்கள் நீளமான சாக்கடை இணைப்புக்களின் தரத்தினை பரிசோதித்தல் மற்றும் 10 கிலோ மீற்றர்கள் நீளமான சாக்கடை குழாய் இணைப்புக்களை பழுதுபார்ப்பதலுக்கான ஒப்பந்தமானது 2014 யூன் 02 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 20 ஆந் திகதிக்கு முன்னர் முடிவுறுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விரிவான கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் மேலும் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 2016 பெப்ரவரி 19 ஆந் திகதி கொழும்பு மாநகர சபைக்கு இணைக்கப்பட்ட பொறியியலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தரப் பரிசோதனையில் சாக்கடை குழாய் இணைப்புக்களை நோக்காகக்கொண்டு கொள்வவு செய்து இழையப்பட்ட மண் குழாய்களின் அமுக்க பலமானது வேண்டப்பட்ட 75 நியூட்டன் / மில்லி மீற்றர் அமுக்க பலத்தினை விடக்குறைவான 33.44 நியூட்டன் / மில்லி மீற்றர் இலிருந்து 64.46 நியூட்டன் / மில்லி மீற்றர் வரையான வீச்செல்லையை கொண்டிருந்தமை வெளிப்பட்டது. குறைந்த அமுக்க பலத்துடனான 1,020 களிமண் குழாய்கள் இழையப்பட்டமையை அது வெளிப்படுத்தியது.

(ii) நடைமுறையின் பிரகாரம், சாக்கடை வாயிற்புழைகளில் இடப்படுகின்ற குப்பைகளை திறம்பட அகற்றுவதற்கு "Silk Sucker" எனும் இயந்திரத்தினை பயன்படுத்துமாறு வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒப்பந்தக்காரர் குப்பைகளை கைமுறையாக அகற்றியிருந்ததுடன் நிர்மாணக் காலத்தினுள் குறித்த இயந்திரத்தைப் பயன்படுத்தியிருக்கவில்லை.

(iii) கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தள விஜயங்களின் போது சாக்கடை குழாய் இணைப்புக்களின் சகிப்புத்தன்மை நிலையானது கைமுறையாக அளவிடப்பட்டிருந்ததுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறையொன்றல்லாதவாறு பதிவு செய்யப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், சாக்கடை குழாய் இணைப்புக்களை இழைக்கும் போதான தாங்குதிறன் மட்டத்தினை அளப்பதற்கு ஒப்பந்தக்காரர் உயர் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதி ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1.23 மில்லியன் முற்பணத்தை வெளித்தரப்பினருக்கு செலுத்தியிருந்ததுடன் ஒப்பந்தமானது 03 மாதக் காலப்பகுதியினுள் நிறைவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், குறித்த உபகரணங்கள் 2016 ஏப்ரல் 30 வரையிலும் கூட வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்களின் போது ஏற்படும் தாமதத்தின் காரணமாக பெலன்கஸ்துடுவயில் நீர் இணைப்பு நிர்மாணப் பணிகளுக்கான 10 சாக்கடை வாயிற்புழைகளை நிர்மாணித்தல் மற்றும் 225 மில்லி மீற்றர் குழாயிடல் இழைக்கும் நடவடிக்கைகளின் கீழான பணிகள் செயற்திட்டத்தின் நோக்கெல்லையிலிருந்து நீக்கப்பட்டிருந்தன.

(ஈ) ஒப்பந்த உடன்படிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம், வனாதமுல்லையிலுள்ள சாக்கடை ஈர்ப்பு வலையமைப்பை முன்னேற்றுவதற்காக 2014 சனவரி 13 ஆந் திகதி கையளிக்கப்பட்டு 2015 சனவரி 13 ஆந் திகதிக்கு முன்னர் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஒப்பந்தத்தின் மேம்படுத்தல் பணிகள் 2015 திசெம்பர் 31 வரையிலும் கூட நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையின் 8.4 மற்றும் 20.1 ஆம் பந்திகளின் பிரகாரம், செயற்திட்டக் காலத்தினை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மாதம்பிட்டிய சுற்றாடல் ஆய்வுகூடத்தின் நிர்மாணப் பணிகள் 2015 மே 01 ஆந் திகதி பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதெனினும், குறித்த ஒப்பந்தமானது 10 மாத காலதாமதத்துடன் 2016 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் கூட நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், நிர்மாணப்பணிகளை துரிதப்படுத்துவதற்கு செயற்திட்டத்தால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.